செ.வெ.எண்: 552/2021 நாள்: 24.11.2021

**திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் திருவண்ணாமலை நாடாளுமன்ற தொகுதி மாற்றுத்திறனாளிகளுக்கான ஏடிஐபி(ADIP) திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினரும் ஏஎல்எம்சிஓ(ALIMCO) நிறுவனமும் திருப்பத்தூர் மாவட்ட நிர்வாகமும் இணைந்து நடத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ உபகரணங்களின் அளவீடுகள் மற்றும் பயனாளிகளை தேர்வு செய்யும் சிறப்பு முகாமை திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சி.என்.அண்ணாதுரை அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.க.தேவராஜி, திரு.ஏ.நல்லதம்பி அவர்களும் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து 67 மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்கினார்கள்.**

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் திருவண்ணாமலை நாடாளுமன்ற தொகுதி மாற்றுத்திறனாளிகளுக்கான ஏடிஐபி(ADIP) திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினரும் ஏஎல்எம்சிஓ(ALIMCO) நிறுவனமும் திருப்பத்தூர் மாவட்ட நிர்வாகமும் இணைந்து நடத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ உபகரணங்களின் அளவீடுகள் மற்றும் பயனாளிகளை தேர்வு செய்யும் சிறப்பு முகாமை திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சி.என்.அண்ணாதுரை அவர்களும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.க.தேவராஜி அவர்களும் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்கள்.

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் திருவண்ணாமலை நாடாளுமன்ற தொகுதி மாற்றுத்திறனாளிகளுக்கான ஏடிஐபி(ADIP) திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினரும் ஏஎல்எம்சிஓ(ALIMCO) நிறுவனமும் திருப்பத்தூர் மாவட்ட நிர்வாகமும் இணைந்து நடத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ உபகரணங்களின் அளவீடுகள் மற்றும் பயனாளிகளை தேர்வு செய்யும் சிறப்பு முகாமில் 67 மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டைகளை திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சி.என்.அண்ணாதுரை அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.க.தேவராஜி, திரு.ஏ.நல்லதம்பி அவர்களும் வழங்கினார்கள்.

இம்முகாமில் திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சி.என்.அண்ணாதுரை அவர்கள் தெரிவித்ததாவது:-

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் திருவண்ணாமலை நாடாளுமன்ற தொகுதி மாற்றுத்திறனாளிகளுக்கான ஏடிஐபி(ADIP) திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினரும் ஏஎல்எம்சிஓ(ALIMCO) நிறுவனமும் திருப்பத்தூர் மாவட்ட நிர்வாகமும் இணைந்து நடத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ உபகரணங்களின் அளவீடுகள் மற்றும் பயனாளிகளை தேர்வு செய்யும் சிறப்பு முகாமில் மொத்தம் 450 மனுக்கள் பெறப்பட்டது. அதில் தகுதிவுள்ள 67 மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்கியதில் மகிழ்ச்சியடைகிறேன். மேலும் 156 உதவி மருத்துவ உபகரங்கள் வழங்கப்பட உள்ளது, மீதமுள்ள மனுக்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டம் திருவண்ணாமலை நாடாளுமன்ற தொகுதியில் உள்ள ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதிற்கு தொடாந்து இரண்டாம் ஆண்டாக கிடைக்க பெற்றுள்ளது. மேலும் இத்தொகுதியில் எத்தனை மாற்றுத்திறனாளிகள் இருக்கிறார்களோ அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் இத்திட்டத்தின் கீழ் அனைத்து உபகரணங்கள் பெற வாய்ப்புள்ளது. நமது தொகுதியில் தான் அதிகமாக மாற்றுத்திறனாளிகள் உள்ளார்கள். இத்தொகுதிற்கு மிகவும் அவசியமான திட்டமாகும். இங்கு வருபுரிந்துள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகளும் இத்திட்டத்தில் நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு தங்களுக்கு தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள வேண்டும் என திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சி.என்.அண்ணாதுரை அவர்கள் தெரிவித்தார்கள்.

இம்முகாமில் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.க.தேவராஜி அவர்கள் தெரிவித்தாவது:-

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் திருவண்ணாமலை நாடாளுமன்ற தொகுதி மாற்றுத்திறனாளிகளுக்கான ஏடிஐபி(ADIP) திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினரும் ஏஎல்எம்சிஓ(ALIMCO) நிறுவனமும் திருப்பத்தூர் மாவட்ட நிர்வாகமும் இணைந்து நடத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ உபகரணங்களின் அளவீடுகள் மற்றும் பயனாளிகளை தேர்வு செய்யும் சிறப்பு முகாமில் மொத்தம் 450 மனுக்கள் பெறப்பட்டது. அதில் தகுதிவுள்ள 67 மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்கியதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களை தேடி மருத்துவம் என்ற இந்தியாவில் எங்கும் இல்லாத ஒரு சிறப்பான திட்டத்தை செயல்படுத்தியுள்ளார்கள். மேலும் மாற்றுத்திறனாளிகளுக்காக மட்டும் பயனடைய இத்திட்டத்தில் அவர்களுக்கு தேவையான 3 சக்கர வாகனங்கள், மிதி வண்டிகள், செயற்கை கை மற்றும் கால்கள், ஊன்றுகோள்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான உதவி மருத்து உபகரணங்கள் வழங்கப்பட உள்ளது. மேலும் இவர்களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சைகள் வழங்கவும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தொகுதியில் உள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகளும் இச்சிறப்பு முகாமை நல்லமுறையில் பயன்படுத்திக்கொண்டு தங்களின் வாழ்வில் மேன்மை அடைய வேண்டும் என ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.க.தேவராஜி அவர்கள் தெரிவித்தார்கள்.

இம்முகாமில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.கு.செல்வாராசு, மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.என்.கே.ஆர்.சூரியகுமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.பாலாஜி, ஒன்றியக்குழு தலைவர்கள் திருமதி.வெண்மதி, திருமதி.சத்தியா, திருமதி.விஜயா, திருமதி.திருமதி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் திருமதி.சத்தியவாணி, திருமதி.சிந்துஜா, திருமதி.ஜெயா, முன்னாள் நகர மன்ற உறுப்பினர் திரு.அன்பழகன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**